மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்    ( கு.எண்.2)

**பொருள் :** அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை பொருத்தி நினைக்கின்றவர் இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

**<u>பழனி நகராட்சி</u>**

2019–ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 30/12/2019–ம் நாள் பிற்பகல் 4.00 மணியளவில் பழனி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள். 30–12 –2019

தனி அலுவலர்/ஆணையாளர்
பழனி நகராட்சி

**பொருள்கள்**

1) பழனி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9, மாடன் ஹோம் சொத்துவரி எண்.080/4318 (080/3501, 080/3502) பொது சொத்துவரி சீராய்வின் போது வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்துவரி எண் வணிக பயன்பாட்டு கட்டிடமாக இருப்பதால் 100 சதவீதம் வரி உயர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து அசல் வழக்கு எண். WP (MD)NO.19183/2019, WP(MD)NO.15542/2019 நாள்.13.09.2019 இடைக்கால தடையாணை வழங்கியுள்ளது.

மேற்படி இவ்வழக்கில் நகராட்சியின் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஜி.அர்ச்சுனன் அவர்கள் ஆஜராகவும், இவ்வழக்கின் வழக்காடு கட்டணம் ரூ.7,500/–ம், டைப்பிங் கட்டணம் ரூ.1,500/–ம் மொத்தம் ரூ.9,000/–(ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளதால், மேற்படி இத்தொகை ரூ.9,000/–யை அலுவலக பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி இவ்வழக்கின் வழக்காடுக் கட்டணம் ரூ.9,000/–யை அலுவலக பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண்.4430/2019/அ2).

2) பழநி நகராட்சி அனைத்து பிரிவில் பணியாற்றும் அலுவலக உதவியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், களப்பணியாளர், துப்புரவு பணியாளர்கள், பொறியர் பிரிவு பணியாளர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோருக்கு 2019-2020–ம் ஆண்டிற்கான சீருடைகள் 2 தொகுப்பு (2 Set) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, தமிழ்நாடு கோஆப் டெக்ஸ், பழநி அவர்களிடம் நேரடியாக வாங்கவும் மற்றும் பணியாளர்களுக்கு தையல்கூலி வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/–ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2694/2016/எச்2)

3) பழனி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29 கதவு எண்.4 நாடார் மடம், பூங்கா சாலை சொத்துவரி எண் (080/ 14277) (080/14279)–க்கு 2017–2018 இரண்டாம் அரையாண்டில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்டம் மற்றும் அறிவுரைகளின்படி வரி குறைவாக உள்ள கட்டிடங்களை அளந்து வரி நிர்ணயம் செய்யப்பட்டதின்படி, வரி நிர்ணயம் செய்யப்பட்டதினை ஆட்சேபனை செய்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து அசல் வழக்கு எண்.WPNO.13469/2019, இடைக்கால தடையாணை வழங்கியுள்ளது.

மேற்படி இவ்வழக்கில் நகராட்சியின் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஜி.அர்ச்சுனன் அவர்கள் ஆஜராகவும், இவ்வழக்கின் வழக்காடு கட்டணம் ரூ.7,500/–ம், டைப்பிங் கட்டணம் ரூ.3,000/–ம் மொத்தம் ரூ.10,500/–(ரூபாய் பத்தாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்க கோரியுள்ளதால், மேற்படி இத்தொகை ரூ.10,500/–யை அலுவலக பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம்அனுமதிக்கலாம்.

2. மேற்படி இவ்வழக்கின் வழக்காடுக் கட்டணம் ரூ.10,500/–யை அலுவலக பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்.1528/2019/அ2).

4) பழனி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட வ.உ.சி. புதிய விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் 231 சதுரடி கொண்ட ஆர்.சி.சி கட்டிட கடை மாத வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் குத்தகை உரிமம் கடை எண்.(67). அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி4.) நாள்.03.07.2007–ன் படி கீழ்காணும் ஆண்டு குத்தகை உரிமம் மாத வாடகைக்கு 01.12.2019 முதல் 30.11.2022 வரையிலான ஆண்டுகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கூட்டப்பொருள் எண்.720, நாள்.31.01.2019–ல் அனுமதி அளித்துள்ளதின்படி ஏலக்குழு முன்னிலையில் 13.11.2019–ல் நடைபெற்ற ஐந்தாவது அழைப்பில் உட்சப்பட்ச ஏலக் கேள்வியாக கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | குத்தகை இனத்தின் பெயர்கள் | மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கலந்து கொண்டவர்கள் பெயர் | ஏலக் கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | பழனி நகராட்சி வ.உ.சி. புதிய விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் 231 சதுரடி கொண்ட ஆர்.சி.சி கட்டிட கடை மாத வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் குத்தகை உரிமம் கடை எண்.(67) | 1. திரு.எ.பக்கீர் முகமது சேட், த/பெ.அமீர் அம்ஜா, 16/47, சேனியர் தெரு, பழனி. | <u>27,000/–</u> | – |
| | | 2. திரு.சையது அபுதாகீர், 50/45, அஸாஸ் ராவுத்தர் தெரு, பழனி | 15,000/– | – |

மேலே கண்ட கடை இனத்திற்கு ஏலக் கேள்வியாக உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.எ.பக்கீர் முகமது சேட், த/பெ.அமீர் அம்ஜா,16/47, சேனியர் தெரு, பழனி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.27,000/– (ரூபாய் இருபத்தி ஏலாயிரம் மட்டும்) என்பதனை ஏற்று ஏலக்குழு பரிந்துரைத்துள்ளது. எனவே மன்றத்தின் ஒப்புதலுக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மேற்காணும் குத்தகை இனத்திற்கு ஏலக்குழுவின் பரிந்துரையின்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.27,000/– (ரூபாய் இருபத்தி ஏலாயிரம் மட்டும்)ஐ மன்றம் ஏற்கலாம்.(ந.க.எண்.119/2019/அ1).

5) பழநி நகராட்சி பொது சுகாதாரப் பணிகள் ஏடிஎஸ் கொசுப்புழு மற்றும் முதிர் கொசுகள் ஒழிப்பு பணிகள் – பழநி நகரம் கோவில் நகரம் என்பதாலும் நாள் ஒன்றுக்கு வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலத்தவர்கள் சாதாரண காலங்களில் நாள் ஒன்றுக்கு சுமார் 10,000 நபர்களும், திருவிழா காலங்களில் 50,000 முதல் 1,00,000 வரை பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். பழநி கோவில் நகரமாக இருப்பதாலும் தற்பொழுது ஐய்யப்ப பக்தர்கள் வந்து செல்வதாலும் நகரின் சுகாதாரத்தை பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளது. மேற்படி பணிகள் தொடர்ந்து செயல்படுத்த வேண்டியுள்ளதால், ஏற்கனவே 2017–ம் ஆண்டு டெங்கு காய்ச்சல் கண்டவர்களின் எண்ணிக்கை 141 நபர்கள். ஏடிஎஸ் முதிர் கொசுகளை அழிக்க தேவையான புகைபோக்கி இயந்திரம் பல்ஸ்பாக் (Pulse Fogg) இயந்திரம் 8 எண்ணிக்கை, மாண்புமிகு குடும்பநலத்துறை மற்றும் சுகதாரத்துறை அமைச்சர் அவர்களின் கலந்தாய்வு கூட்ட அறிவுரைகளின் கீழ் 2017 நவம்பர் மாதம் புதியதாக பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி வாங்கப்பட்டு இதுவரை நல்லமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது இந்தாண்டு 2019 செப்டம்பர் முதல் டெங்கு காய்ச்சல் 25 நபர்களுக்கு கண்டறியப்பட்டுள்ளது. கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொண்டு புகை மருந்து அடித்து காய்ச்சல் மற்றும் ஏடிஎஸ் முதிர்கொசு உற்பத்தியினை அழிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிக அளவு பயன்பாட்டின் காரணமாக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதால் 5 எண்ணிக்கை புகைபோக்கி எந்திரம் மற்றும் வாகனத்தின் மூலம் புகை தெளிக்கும் இயந்திரம் தற்பொழுது பழுதடைந்துள்ளது.

எனவே, பொது சுகாதார அவரச அவசியம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி உடன் பழுது நீக்கம் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு மேற்கண்ட இயந்திரம் பராமரிப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வருடாந்திர பராமரிப்பு ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5228/2019/H2).**

**6)** பழனி நகராட்சி தொடர்பாக எழும் வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை, மற்றும் கீழமை நீதிமன்றங்களில் ஆஜராகும் நகராட்சி நிலை வழக்கறிஞர்களுக்கு 2019-2020 வழக்காடு கட்டணங்கள் வழங்கிடவும் மற்றும் வழக்கு தொடர்பான புகைப்படங்கள் மற்றும் ஆவணங்கள் ஒளிநகல் எடுத்தல் (ஜெராக்ஸ்) கணினி பதிவுகள் நகல் எடுத்தல் மேலும் வழக்கு தொடர்புடைய செலவினங்களை பொதுநிதியில் உத்தேச செலவினம் மேற்கொள்ள ரூ.2,00,000.∴- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) தனிஅலுவலா் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

இச்செலவினம் அத்தியாவசியப்பணி என்பதால் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3120.∴2019.∴எப்1).

**7)** சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளை இந்நகராட்சி சார்பாக திரு.T.S.முகம்மது முகைதீன், வழக்கறிஞர் என்பவரை ஏற்று நடத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகடா மன்ற வழக்கறிஞராக ஏற்றுக்கொள்ளும் பொருட்டு அன்னாருக்கு வழங்கப்படும் செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். **(ந.க.எண். 5374/2019/சி2).**

8) பழனி நகராட்சி தனியார் சந்தை அனுமதியற்ற முஸ்லீம் தர்ம பரிபாலன சங்கம், சுப்பிரமணியபுரம் ரோடு தனியார் சந்தை மற்றும் கடைகள் அரசாணை மற்றும் நீதிமன்ற உத்திரவின்படி பூட்டி சீல் வைக்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.WP(MD)NO.17917 முதல் 17921 of 2004 (WPMP.NOS.21299 and 21303 of 2004) நகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளதை எதிர்த்து நகாட்சி சார்பாக மேல் முறையீடு செய்யப்பட்டு சட்ட கருத்துரு வழங்கியுள்ளதற்கும் மற்றும் வழக்கு கட்டணம் வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு ரூ.50,000/– வழங்கிட கூட்டப் பொருள் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.

(WP(MD)NO. 17917 முதல் 17921 of 2004) (WPMP.NOS.21299 and 21303 of 2004)

<u>அலுவலகக்குறிப்பு</u>: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேல்முறையீடு வழக்கு நடத்த இந்நகராட்சியின் சார்பாக திரு.பி.ஸ்ரீனிவாஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சென்னை அவர்கள் ஆஜராகவும், அதற்குரிய வழக்காடுக்கட்டணம் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.3993/2017/அ1).**

9) பழனி நகராட்சி தனியார் சந்தை அனுமதியற்ற முஸ்லீம் தர்ம பரிபாலன சங்கம், சுப்பிரமணியபுரம் ரோடு தனியார் சந்தை மற்றும் கடைகள் அரசாணை மற்றும் நீதிமன்ற உத்திரவின்படி பூட்டி சீல் வைக்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.WP(MD)NO.17890 மற்றும் 17891 of 2004 (WPMP.NOS.21262 and 21263 of 2004) நகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளதை எதிர்த்து நகாட்சி சார்பாக மேல் முறையீடு செய்யப்பட்டு சட்ட கருத்துரு வழங்கியுள்ளதற்கும் மற்றும் வழக்கு கட்டணம் வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு ரூ.30,000/– வழங்கிட கூட்டப் பொருள் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.

(WP(MD) NO.17890 மற்றும் 17891 of 2004) (WPMP.NOS.21262 and 21263 of 2004)

<u>அலுவலகக்குறிப்பு</u>: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேல்முறையீடு வழக்கு நடத்த இந்நகராட்சியின் சார்பாக திரு.பி.ஸ்ரீனிவாஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சென்னை அவர்கள் ஆஜராகவும், அதற்குரிய வழக்காடுக்கட்டணம் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.3993/2017/அ1)**

**10)** பழனி நகராட்சிக்கு சொந்தமான சன்னதி ரோடு, கடை எண்.6 குத்தகைதாரர் இறந்துவிட்டதால், குத்தகைதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மாத வாடகைத் தொகை நிலுவை அதிகமாக இருந்த காரணத்தினால் 12.03.2019 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டு மறு ஏலம் கோரப்பட்டுள்ள நிலையில் குத்தகைதாரரின் மனைவி திருமதி.மணிமேகலா க/பெ.லேட்.S.S.மணி என்பவர் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்.WP(MD)NO.23414 of 2019 மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக ஆஜராக வேண்டியுள்ளதால் வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு வழக்காடு கட்டணம் ரூ.15,000/– வழங்கிட கூட்டப் பொருள் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.
(WP(MD)NO.23414 of 2019)

**<u>அலுவலகக்குறிப்பு</u>:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. வழக்கு நடத்த இந்நகராட்சியின் சார்பாக திரு.பி.ஸ்ரீனிவாஸ், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சென்னை அவர்கள் ஆஜராகவும், அதற்குரிய வழக்காடுக்கட்டணம் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4796/2019/அ1).

**11)** பழனி நகராட்சிக்குட்பட்ட மதனபுரம் பகுதியில் சுமார் 100 குடும்பங்களுக்கு பிற தேவைகளுக்கு பயன்படுத்த கூடிய ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தேவைக்கு பெறப்படும் நீர் இல்லை. எனவே அப்பகுதி மக்களுக்கு பிற தேவைக்கு பயன்படுத்த நீர் தேவைப்படுவதால் புதிதாக ஆழ்துளை கிணறு ஒன்று அமைத்து அப்பகுதி மக்களின் அடிப்படை தேவைகளை ஏற்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/– க்கு செலவினத்தை குடிநீர்நிதியில் மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**12)** பழனி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் உள்ள சுலிஸ் வால்வு மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது எற்படும் பழுதுகளை சரி செய்யும் போது குழாய் மற்றும் GI பைப்களை சரிசெய்யவும், தேவையான டை Set, Yarn, Load Wool, பீஸ்கம்பி மற்றும் சிமெண்ட் போன்ற பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/– க்கு நிர்வாக அனுமதி மற்றும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**13)** பழனி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 கீழ்வடம்போக்கித் தெருவில் மேற்குப் பகுதி கடைசியில் உள்ள இரண்டு பாலங்கள் மிகவும் பழுதாகி உள்ளது. எனவே மழை காலங்களில் தண்ணீர் வடிகாலில் செல்லாமல் சாலையின் நடுவே சென்று பாதசாரிகளுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே பாலத்தினை சீர் செய்யவும் பழைய பாலத்தினை இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கவும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலச்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு நிர்வாக அனுமதியும், செலவினத்தினை பொது நிதியில் மேற்க்கொள்ளவும் கூட்டத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) அனுமதிக்கலாம்
2) பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

14) 127, பழனி சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் பழனி நகராட்சி பகுதிக்குட்பட்ட வாக்காளர் பட்டியல் பாகம் எண். 70 முதல் 129 வரை உள்ள பாகங்களில் சிறப்பு திருத்தம் முறையில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் இதர திருத்தல்களை செய்து கொள்ள படிவம் 6,7,8,8A பெற்று சரி பார்த்து அவைகளை வெளி நபரைக் கொண்டு கணினியில் பதிவுகளை செய்து முடிக்கவும் வாக்காளர் தினத்தை கொண்டாடுவதற்கும் மேலும் இது தொடர்பான பணிகளை செய்து முடிக்கவும் ஆகும் தோராய செலவு ரூ.1,00,000/– க்கு ( ஒரு லட்சம் மட்டும் ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**15)** பழனி நகராட்சி பொது சுகாதாரப் பணிகள் ஏடிஎஸ் கொசுப்புழு மற்றும் முதிர் கொசுகள் ஒழிப்பு பணிகள் புகை மருந்து அடித்து காய்ச்சல் மற்றும் ஏடிஎஸ் முதிர்கொசு உற்பத்தியினை அழிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புகைபோக்கி எந்திரம் மற்றும் வாகனத்தின் மூலம் புகை தெளிக்கும் இயந்திரங்கள் அதிக பயன்பாட்டின் காரணமாக அடிக்கடி பழுது ஏற்பட்டு கொசு ஒழிப்பு பணிகள் தாமதமாகின்றது. எனவே பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மேலும் வாகனத்தில் பொருத்தி புகை அடிக்கும் புகைபோக்கி இயந்திரம் பொது சுகாதாரப் பணிகள் முதிர் கொசுகள் ஒழிப்பு பணிக்கு வாகனத்தில் பொருத்தி புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (70 Litre Capacity Vehicle Mounted fogging machine) புதியதாக வாங்குவதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.7,00,000/- பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தனி அலுவலர் அவர்களின்

கூட்டத்தில் பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

பொது சுகதாராம் நலன் கருதி அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5416/2019/H2).**

**16)** இந்நகராட்சியில் பல்வேறு பணிகளில் திரு.V.நடராஜன் ஒப்பந்ததாரர் வேளைகள் செய்து வேலைப்பட்டியலில் 5% பிடித்தம் செய்யப்பட்ட தொகையை வழங்கக் கோரி திரு.V.நடராஜன் ஒப்பந்ததாரர் விண்ணப்பித்துள்ளார். மேற்படி திரு.V.நடராஜன் ஒப்பந்ததாரது வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் அளவுப்புத்தகம் மற்றும் கோப்புகளின் அடிப்படையில் பொறியற்பிரிவில் மற்றும் தணிக்கைப் பிரிவில் தொகை வழங்க சிபாரிசு செய்துள்ளார்கள் மேலும் மேற்படி தொகை காலங்கடந்த வைப்புத் தொகையில் உள்ளது. எனவே கீழ்க்கண்டவாறு தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பதிவேடு | வருடம் | பதிவேட்டின் ப.எண் | வ.எண் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2019–20 நிலுவை பதிவேடு Lapsed Dep | 2012–13 | 39 | 81 | 14400/– |
| 2 | “ | “ | 46 | 202<br>204 | 15594/–<br>19496/– |
| 3 | 2019–20 நிலுவை பதிவேடு I | “ | 12 | – | 1428/– |
| | | | | மொத்தம் | 50918/– |

அலுவலகக்குறிப்பு

1) தணிக்கை அறிக்கையின்படி பிடித்தம் போக மீதி தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
2) பொது நிதி (RF- Deposit) செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

17) பொருள் பழநி நகராட்சிக்கு சுவட்ச் பாரத் மிசன் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 105து மாநில உயர்மட்ட அறிக்கை குழுக் கூட்டம் 31/10/19 அன்று தலைமைச் செயலகம், சென்னையில் நடைபெற்றதில் நிகழ்ச்சி நிரல் எண். 5ன் கீழ் ( i) b- ல் பொருள் வள மீட்பு மையம் ரூ.18.00 இலட்சத்தில் அமைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மதிப்பீடு ரூ.18.00 இலட்சத்தில் பணி மேற்க்கொள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற இவ்வலுவலக கடித. நு.க.எண். 4328/2018/இ1 நாள். 28/11/2019ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.28819–2/P3/2019 நாள். 2/12/2019ல் நிர்வாக அனுமதி கீழ்க்கண்டுள்ளவாறு நிதி மேற்க்கொள்ள அனுமதி விரப்பெற்றுள்ள விபரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| மத்திய அரசு பங்களிப்பு (GOI Share) | மாநில அரசு பங்களிப்பு (GOTN Share) | நகராட்சி பங்களிப்பு (ULB Share) | மதிப்பீட்டு மொத்தத் தொகை (Total Estimate Amount) |
|---|---|---|---|
| 35% (6.30 Lakhs) | 55 % (9.90 Lakhs) | 10 % (1.80 Lakhs) | 100 % (18.00 Lakhs) |

மேற்படி பணியினை உழவர்சந்தை சாலையில் உழவர் சந்தை வடக்கு எதிரில் உள்ள காலி இடத்தில் அமைக்கவும் மதிப்பீடு ரூ.18.00 இலட்சத்தில் நகராட்சி பங்குத் தொகை ரூ.1.80 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்க்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்க்கொள்வதற்கும் கூட்டப் பொருள் வரைவு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1) பதிவு செய்யலாம்.

2) மேற்படி கட்டிடத்தினை உழவர் சந்தை சாலையில் உழவர் சந்தை வடக்கு எதிர்புறத்தில் உள்ள காலி இடத்தில் அமைக்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்க் கெள்ளவும் நகராட்சி பங்குத் தொகை ரூ.1.80 இலட்சத்தினை பொது நிதியில் செலவினம் மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

18) பழநி நகராட்சியில் தற்போது கீழ்க்கண்டவாறு கணினிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1. ஆணையாளர் அறை – 1 கணினி
2. பொதுப் பிரிவு – 5 ”
3. பொறியியல் பிரிவு – 5 ”

4. கணினி பிரிவு – 2 ”
5. வருவாய் பிரிவு – 4 ”
6. நகரமைப்பு பிரிவு – 3 ”
7. சுகாதாரப் பிரிவு – 2 ”
8. தணிக்கைப் பிரிவு – 2 ”

----

24

மொத்தம் 24 எண்ணம் கணினிகள் உள்ளன. மேற்கண்ட கணினிகளுக்கு தற்போது BSNL மூலம் Internet Connection பெறப்பட்டு உள்ளது. BSNL மூலம் பெறப்பட்ட Internet Connection சரிவர இயங்காததாலும், BSNL ஊழியர்கள் சரிவர பராமரிப்பு பணிக்கு வராததாலும் (CWBS) இணையதளம் மூலம் பார்க்கப்படும் பணிகள் தாமதமாகிறது.

எனவே (CWBS) இணையதளம் மூலம் பார்க்கப்படும் பணிகள் துரிதமாக செய்ய மத்திய அரசால் பராமரிக்கப்படும் Railnet மூலம் Internet connection பெற வேண்டியுள்ளது. எனவே விலைப்புள்ளித் தொகை ரூ. 22,500/– பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், மாதாமாதம் Railnet Connection-க்கு ஆகும் தொகை ரூ. 7000 /– பிரதி மாதம் செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

19) பழநி நகராட்சியில் தமிழ்நாடு மாநில உயர்நிலை அதிகார குழு 10–வது கூட்டம் 31/10/2019–ல் நடைபெற்ற கூட்டத்தில் SWM-SBM 2019-2020 - ம் ஆண்டிற்கு பழநி நகராட்சிப் பகுதியில் பொருள்/வளம் மீட்பு மையம் (Meterial/Resource Recovery Centre) அமைக்க ரூ. 18.00 இலட்சத்தில் அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 24/12/2019– ல் கோரப்பட்டதில் பின்வருமாறு,

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1 | **திரு.K.ஆறுமுகம்,**<br>80/2, அப்பர்தெரு,<br>முதல் குறுக்குத் தெரு,<br>R.F.ரோடு,பழனி. | –4.32% மதிப்பீட்டிற்கு குறைவு<br>முன்வைப்புத் தொகை<br>**ரூ.18,000/–**<br>வங்கி வரைவோலை எண்.522324/ சிட்டி யூனியன் வங்கி, நாள்.24.12.2019 |
| 2 | **திரு.N.கருப்புச்சாமி**<br>18/32, T.K.N.புதுார்,<br>ஆயக்குடி(PO),<br>பழனி(TK). | 1.31% மதிப்பீட்டிற்கு அதிகம்.<br>முன்வைப்புத் தொகை **ரூ.18,000/–**<br>வங்கி வரைவோலை எண்.883277 / கரூர் வைசியா வங்கி, நாள். 23.12.2019 |
| 3 | திரு. K.சாமித்துரை,<br>T.K.N.புதுார், ஆயக்குடி(PO),<br>பழனி(TK). | –3.27% மதிப்பீட்டிற்கு குறைவு<br>முன்வைப்புத் தொகை **ரூ.18,000/–**<br>வங்கி வரைவோலை எண்.808727 /<br>இந்தியன் ஓவர்சீர் வங்கி,<br>நாள். 24.12.2019 |

மேற்கண்ட வேலைக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் **திரு.K.ஆறுமுகம்,** என்பவர் –4.32 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள **திரு.K.ஆறுமுகம், –4.32 %** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 4328/2018/இ1).**

**20)** பழநி நகரில் குடிநீர் விநியோகப் பணிகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் (Out Sourcing) அனுப்புதல் பணிக்கு குடிநீர் நிதி 2019–2020–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.99.50 இலட்சத்திற்கு பணி தனி அலுவலர் கூட்டப் பொருள்எண். 841 நாள்.30/ 05 /2019 –ன் கீழ் நிர்வாக அனுமதி அளித்ததின் பேரில் 28–11–2019–ம் தேதியன்று குறுகியகாலஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ எண் | கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூர்ந்தாய்வு, தகுதி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.ASN, Construction,<br>கோவிலம்மாபட்டி, பழநி. | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகிறது. |
| 2. | திரு.கே.பொன்னுச்சாமி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர். | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகவில்லை. |

மேற்கண்டவாறு தொழில் நுட்ப தகுதி பூர்த்தியான வரிசை எண்.1 –ன் விலை விகித ஒப்பந்தப்புள்ளி 29/11/2019–ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில்.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1 | **M/s.ASN, Construction,**<br>நரிக்கல்பட்டி, பழநி. | –0.14 % மதிப்பீட்டிற்கு குறைவு. முன்வைப்புத் தொகை ரூ.100000/– சலான் எண் ந.செ.சீ.எண். 080/1–1–18–19–20/0005406 நாள்.28.11.2019. |

மேற்கண்ட வேலைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியான ஒரே ஒப்பந்தப்புள்ளி **M/s.ASN, Construction,** கோவிலம்மாபட்டி, பழநி என்பவரிடமிருந்து மதிப்பீட்டிற்கு –0.14 % விட குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள் **M/s.ASN, Construction,** கோவிலம்மாபட்டி ,பழநி –0.14 % ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஏற்பு கடிதம் மற்றும் வேலை உத்திரவு வழங்கியமையும் ஏற்கலாம். (ந.க.எண். 3012/2016/இ2).

**21)** பழநி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018–2019, பழநி நகராட்சி 1–வது வார்டு பெருமாள் கோவில் எதிரில் உள்ள போர்வெல் முதல் நடுத்தெரு முழுவதும் பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகிக்கும் பணி ரூ.0.70 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களின் கடிதம் ந.க.எண்.216/2019/அ5, நாள். 17.10.2019 உத்திரவின்படி, 13/11/2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | திரு. நா.கருப்புச்சாமி ,<br>18/32, டி.கே.எண்.புதூர்,<br>ஆயக்குடி (Po),<br>பழநி (Tk). | -0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>ரூ.700/–<br>சலான் எண் ந.செ.சீ.எண். 080/1–1–19–20/0005159, நாள். 13/11/2019 |
| 2. | திரு. **P.**பழனிச்சாமி,<br>வேலம்பட்டி,<br>பழநி. | 1.32% மதிப்பீட்டிற்கு அதிகம்.<br>ரூ.700/–<br>சலான் எண் ந.செ.சீ.எண். 080/1–1–19–20/0005160, நாள். 13/11/2019 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்1 ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு. நா.கருப்புச்சாமி, என்பவர் -0.02% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு :

குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம், பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் வேலை உத்திரவு வழங்கியமையை ஏற்கலாம். (ந.க.எண்.2711 /2019/இ1).

22) பழநி நகராட்சியில் **சாலைப்பணிகள் (TURIP 2019-2020)** திட்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள்.03.09.2019–ல் , மதிப்பீடு ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மூன்று சிப்பமாக எடுத்து தொழில்நுட்ப அனுமதி எண். /2019–2020/CE நாள்.18/10/2019–ன்படி சிப்பம் எண்.1, மதிப்பீடு ரூ.1.50 கோடியில் ராஜா நகர், இலட்சுமிபுரம் மெயின்ரோடு, இலட்சுமிபுறம் பழைய அஞ்சல் நிலையம் குறுக்குச்சாலை, அண்ணாநகர் குறுக்குச்சாலை, திருவள்ளுவர் குறுக்குச்சாலை, இ.எஸ்.ஐ ரோடு, இடும்பன் இட்டேரி ரோடு, இந்திரா நகர், கவுண்டர் இட்டேரி ரோடு குறுக்குச்சாலை, சத்யா நகர் (தொடர்வண்டி அணுகுச்சாலை அருகில்), ஆகிய சாலைகளில் தார்தளம் அமைக்கும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 13/11/2019– ல் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி விபரம் பின்வருமாறு.

| வ எண் | கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூர்ந்தாய்வு, தகுதி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.V. பெரியசாமி, நகராட்சி ஒப்பந்ததாரர். | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகிறது. |
| 2. | M/s.ஜவகர் கன்ஸ்ட்ரக்ஷன், நகராட்சி ஒப்பந்ததாரர். | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகிறது. |

மேற்கண்டவாறு தொழில் நுட்ப தகுதி பூர்த்தியான வரிசை எண்.1 மற்றும் 2 ஆகியவர்கள் விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில்.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.V. பெரியசாமி, நகராட்சி ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 4.90% அதிகம் |
| 2 | M/s.ஜவகர் கன்ஸ்ட்ரக்ஷன், நகராட்சி ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 5.00%அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த (L1) திரு.V. பெரியசாமி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.90% கூடுதலாக உள்ளதால் விலைக் குறைப்புக் கடிதம் கோரப்பட்டதில் அன்னார் வெளி சந்தையில் கட்டுமானப் பொருட்களின் விலை அதிகமாக உள்ளதால் அன்னார் 4.85% கூடுதலாக பணி மேற்கொள்ள கடிதம் கொடுத்துள்ளார், எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட 4.85% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.V.பெரியசாமி, பழநி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். **(ந.க.எண்.3812/2019/ இ1).**

23) பழநி நகராட்சியில் **சாலைப்பணிகள் (TURIP 2019-2020)** திட்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள்.03.09.2019–ல் , மதிப்பீடு ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மூன்று சிப்பமாக எடுத்து தொழில்நுட்ப அனுமதி எண். /2019–2020/CE நாள்.18/10/2019–ன்படி சிப்பம் எண்.2, மதிப்பீடு ரூ.2.00 கோடியில் இலட்சுமிபுறம் பழைய அஞ்சல் நிலையம் குறுக்குச்சாலை, அரசபொதுமருத்துவமனை கிழக்குபுறம் முதல் குறுக்குச்சாலை, ரங்கநாதன் தெரு, அம்பலகாரர் தெரு, சராப் தெரு, ராமர்கோவில் தெரு, எருமைக்கார தெரு, தேவாங்கர் மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெரு, தோட்டக்கார தெரு மெயின் ரோடு மற்றும் குறுக்குச்சாலை, நரசிம்மன் தெரு, ராஜாஜி சாலை ரோடு மற்றும் குறுக்குத் தெரு, தெரசம்மாள் காலனி தெரு ஆகிய சாலைகளில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 13/11/2019– ல் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி விபரம் பின்வருமாறு.

| வ எண் | கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூர்ந்தாய்வு, தகுதி விபரம் |
|---|---|---|
| 1. | **M/s.கோவிந்தசாமி & கோ.,** No.3, தாராபுரம் ரோடு, துங்காவி, மடத்துக்குளம் தாலுக்கா. | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகிறது. |

| | | |
|---|---|---|
| 2. | திரு.கே.பொன்னுச்சாமி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர். | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகவில்லை. |

மேற்கண்டவாறு தொழில் நுட்ப தகுதி பூர்த்தியான வரிசை எண்.1 –ன் விலை விகித ஒப்பந்தப்புள்ளி 20/11/2019–ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில்.

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1 | **M/s.கோவிந்தசாமி & கோ.,** | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 7.90% அதிகம் |

மேற்கண்ட வேலைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியான ஒரே ஒப்பந்தப்புள்ளி **M/s.கோவிந்தசாமி & கோ.,** என்பவரிடமிருந்து மதிப்பீட்டிற்கு 7.90% கூடுதலாக வரப்பெற்றுள்ளதால் அன்னாரை விலைகுறைப்பு செய்துதர சம்மதக்கடிதம் கோரியதில் மேற்படியார் மதிப்பீட்டிற்கு 4.95% கூடதலாக வேலைசெய்ய விலைகுறைப்பு செய்து சம்மதக்கடிதம் வழங்கியுள்ளதை ஏற்க கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) இப்பணிக்கான மதிப்பீடானது 2019–2020 ஆம் நிதியாண்டு விலைகளுக்குட்பட்டு தயாரிக்கப்பட்டதாலும், தற்போது உள்ளூரில் மணல் தட்டுப்பாடு மற்றும் பொருட்களின் விலை, ஆட்களின் கூலி மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரினால் இவ்விலை விகிதங்களுக்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறும் என உறுதியாக கூறுவதற்கில்லை என்பதுடன், பணியை மேலும் காலதாமதமின்றி மேற்கொண்டு முடிக்க ஏதுவாக வரப்பெற்ற ஒரே ஒரு தகுதியான மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3) மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.3812/19/இ1).**

**24)** பழநி நகராட்சியில் **சாலைப்பணிகள் (TURIP 2019-2020)** திட்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள்.03.09.2019–ல் , மதிப்பீடு ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மூன்று சிப்பமாக எடுத்து தொழில்நுட்ப அனுமதி எண். /2019–2020/CE நாள்.18/10/2019–ன்படி சிப்பம் எண்.3, மதிப்பீடு ரூ.1.50 கோடியில் அம்பேத்கார் தெரு, தில்லையாடிவள்ளியம்மை தெரு மற்றும் குறுக்குத் தெரு, கிழக்கு பாட்டாளித் தெரு மற்றும் குறுக்குத் தெரு, குறும்பப்பட்டி தெரு மற்றும் குறுக்குத் தெரு, திலகர் வீதி ஆகிய சாலைகளில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 13/11/2019– ல் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி விபரம் பின்வருமாறு.

| வ எண் | கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூர்ந்தாய்வு, தகுதி விபரம் |
|---|---|---|
| 1. | **M/s.கோவிந்தசாமி & கோ.,**<br>No.3, தாராபுரம் ரோடு, துங்காவி,<br>மடத்துக்குளம் தாலுக்கா | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகிறது. |
| 2. | திரு.கே.பொன்னுச்சாமி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர். | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகவில்லை. |

மேற்கண்டவாறு தொழில் நுட்ப தகுதி பூர்த்தியான வரிசை எண்.1 –ன் விலை விகித ஒப்பந்தப்புள்ளி 20.11.2019–ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில்.

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1 | **M/s.கோவிந்தசாமி & கோ.,** | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 8.15% அதிகம் |

மேற்கண்ட வேலைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியான ஒரே ஒப்பந்தப்புள்ளி **M/s.கோவிந்தசாமி & கோ.,** என்பவரிடமிருந்து மதிப்பீட்டிற்கு 8.15% கூடுதலாக வரப்பெற்றுள்ளதால் அன்னாரை விலைகுறைப்பு செய்துதர சம்மதக்கடிதம் கோரியதில் மேற்படியார் மதிப்பீட்டிற்கு 4.95% கூடதலாக வேலைசெய்ய விலைகுறைப்பு செய்து சம்மதக்கடிதம் வழங்கியுள்ளதை ஏற்க கூட்டப்பொருள் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

__அலுவலகக் குறிப்பு__

1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) இப்பணிக்கான மதிப்பீடானது 2019–2020 ஆம் நிதியாண்டு விலைகளுக்குட்பட்டு தயாரிக்கப்பட்டதாலும், தற்போது உள்ளூரில் மணல் தட்டுப்பாடு மற்றும் பொருட்களின் விலை, ஆட்களின் கூலி மதிப்பீட்டிற்கு அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரினால் இவ்விலை விகிதங்களுக்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறும் என உறுதியாக கூறுவதற்கில்லை என்பதுடன், பணியை மேலும் காலதாமதமின்றி மேற்கொண்டு முடிக்க ஏதுவாக வரப்பெற்ற ஒரே ஒரு தகுதியான மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3) மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.3812/19/இ1).**

**25)** பழநி நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை 2018–2019–ன் கீழ் ரூ.592.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி உரக்கிடங்கில் உயிரி செயலாக்க முறையில் (Bio Mining) குப்பைகளை அகற்றும் பணி மேற்கொள்ள நகராட்சி நிாவாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.22866/2018/பி3, நாள்.23/08/2018–ல் மேற்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது, அதனை தொடர்ந்து இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை –5 அவர்களின் ER.No, 255/2018–2019, நாள்.27/08/2018–ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 12/10/2018–ம் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) ஒருவருடையது மட்டுமே தகுதியானதாக உள்ளதால் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் M/s.Voltech O and M Services PVT LTD, No.2/429, Mount Poonamalli Road, Ayyappanthangal, Chennai-56 என்பவரின் தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியார்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 12/10/2018-ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு

| வ எண் | கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூர்ந்தாய்வு, தகுதி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Voltech O and M Services PVT LTD, No.2/429, Mount Poonamalli Road, Ayyappanthangal, Chennai-56 | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகிறது. |
| 2. | M/s. Green Fine EQuipments Coimbatore | தொழில் நுட்ப தகுதி பூர்த்தியாகவில்லை. |

மேற்கண்டவாறு தொழில் நுட்ப தகுதி பூர்த்தியான வரிசை எண்.1 –ன் விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில்.

__ஒப்பந்தப்புள்ளி விபரம்__

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1 | M/s.Voltech O and M Services PVT LTD, No.2/429, Mount Poonamalli Road, Ayyappanthangal, Chennai-56 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 7.20% அதிகம் |

மேற்கண்ட வேலைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியான ஒரே ஒப்பந்தப்புள்ளி M/s.Voltech O and M Services PVT LTD,என்பவரிடமிருந்து மதிப்பீட்டிற்கு 7.20% கூடுதலாக வரப்பெற்றுள்ளதால் அன்னாரை விலைகுறைப்பு செய்துதர சம்மதக்கடிதம் கோரியதில் மேற்படியார் மதிப்பீட்டிற்கு 4.20% கூடுதலாக பணியினை செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளார் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

__அலுவலகக் குறிப்பு__

1) மேற்காணும் திட்டப் பணியினை விரைவாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டுச் சான்றிதழ் அளித்திட நகராட்சி நிாவாக ஆணையர் ஆய்வுக் கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி பொது மக்களின் நலன் கருதி பணினை மேற்கொள்ள 4.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது, மேலும் தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும் தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்ககாம்.

2) அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், திட்டப்பணியினை குறித்த காலத்தில் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.2592/2018/இ1).**

**26)** நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்.29426-1/P3/2019, நாள்.06-12-2019 கடிதத்தில் தூய்மை இந்தியா திட்டத்தில் சேகரமாகும் மக்காத கழிவுகளை அழிக்க (Dry Waste) திண்டுக்கல் மாநகராட்சிக்கு தினசரி 10 டன் அளவுள்ள மக்காத கழிவுகளை அழிக்க (Inciration Plant) எரியூட்டும் இயந்திரம் - 1 எண்ணிக்கை அமைக்க 31-10-2019–ம் தேதி நடைபெற்ற 10வது மாநில உயர்நிலை குழு கூட்டத்தில் 100 லட்சம் அனுமதித்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட Incineration Plant–ல் அருகில் உள்ள பழநி, கொடைக்கானல், பல்லடம், கரூர், ஒட்டன்சத்திரம் ஆகிய நகராட்சியில் சேகரமாகும் மக்காத கழிவுகள் (Dry Waste) அழிக்க பயன்படுத்தி கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் மேற்கண்ட Inciration Plant எரியூட்டு ஆலை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகளை அருகில் உள்ள மேற்கண்ட நகராட்சிகளும் பங்கீடு செய்து ஏற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பழநி நகராட்சி பகுதியில் சேகரமாகும் மக்காத குப்பைகளை (Dry Waste) திண்டுக்கல் மாநகராட்சி Incineration Plant பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கு ஆகும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினங்களில் பழநி நகராட்சிக்கு உண்டான பங்கு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

பொது சுகதாராம் நலன் கருதி அவசரம் அவசியம் கருதி கூட்டபொருள் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.972/2019/H2)**

**27)** பழநி நகராடசியில் பொதுப்பிரிவு கணினி வசூல் மையத்தில் உள்ள **3** பிரிண்டர்களும் அடிக்கடி பழுதாகிவிடுவதால் வசூல் பணிகள் அனைத்தும் பாதிப்படைகிறது. தற்போது ஜனவரி முதல் மார்ச் வரையான காலங்களில் சொத்துவரி, குடிநீர் வரி, கடைவரி, தொழில்வரி ஆகிய வரியினங்கள் அனைத்தும் வசூலிக்கப்பட வேண்டி உள்ளதால் அவசர அவசியம் கருதி Epson 24 pin உள்ள **3** பிரிண்டர்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினத் தொகை **ரூ.50,000/–** க்கு நிர்வாக அனுமதியும், பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் கூட்டத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) அனுமதிக்கலாம்
2) செலவினத்தை பொது நிதியில் மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.(ந.க.எண். 5423/2019/இ1)

**28)** பழநி நகராட்சி அலுவலகம், பொறியற் பிரிவில் இருக்கை எழுத்தர்கள் மற்றும் இளநிலைப்பொறியாளர்ஆகியோர் பயன்படுத்த தேவையான A4 பேப்பர் மற்றும் கணினியில் பிரின்ட் எடுக்க பயன்படுத்தும் டோனர் தீர்ந்து மதிப்பீடுகள் தயார் செய்வதால் விரைவில் தீர்ந்துவிடுகிறது, எனவே பேப்பர் மற்றும் டோனர் தனியே வாங்கி பயன்படுத்த அனுமதிக்கு வைக்கப்படுகிறது அதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,000/– க்கு நிர்வாக அனுமதி மற்றும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள்.30 –12–2019

தனி அலுவலர்
பழனி நகராட்சி.